

நெல்லை வரவேற்பில் முதல்வர் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சுவதும், பிஞ்சு உள்ளங்கள் வரிசையாக நின்று வாஞ்சையுடன் மலர்க் கொத்து வழங்கி மகிழ்வதும், நெஞ்சை அள்ளும் நிகழ்வாகும் !



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.2.2025) திருநெல்வேலியில் நடைபெற்ற அரசு விழாவில், 1304.66 கோடி ரூபாய் செலவில் 23 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 309.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சியர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.2.2025) லடாக் யூனியன் பிரதேசம், லே நகரத்தில் நடைபெற்ற கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டு போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், பயிற்றுநர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.2.2025) புது தில்லியில் நடைபெறவிருக்கும் உலக பாரா தடகள கிராண்ட் ப்ரீ (World Para Athletic Grand Prix) 2025 போட்டியில் பங்கேற்கவிருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 16 வீரர், வீராங்கனைகளுக்கு செலவீன தொகையாக தலா ரூ. 65 ஆயிரம் வீதம் ரூ.10.40 லட்சத்திற்கான காசோலைகளை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், பயிற்றுநர்கள் உடனிருந்தனர்.

### ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்:

# கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் முன்னிலை!

## பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வாகை சூடுகிறார்!



ஈரோடு, பிப்.9 -

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட வி.சி.சந்திரகுமார், தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளரைவிட பல்லாயிரக்கணக்கான வாக்குகள் கூடுதலாகப் பெற்று வாகை சூடினார்.

அதன் விவரம் வருமாறு:-

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலை கடந்த ஜனவரி 7ம் தேதி தேர்தல் ஆணையம் அறிவித்தது. இந்தத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் உள்ளிட்ட 46 பேர் போட்டியிட்டனர்.

இந்த தேர்தலில் ஆண் வாக்காளர்கள் 1 லட்சத்து 10 ஆயிரத்து 128 பேரும், பெண் வாக்காளர்கள் 1 லட்சத்து 17 ஆயிரத்து 381 பேரும், மூன்றாம் பாலினத்தவர்கள் 37 பேரும் என மொத்தம் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளிக்க 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

வாக்குப்பதிவு 5.2.2025 அன்று காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற்றது. இதில் 67.97 சதவீதம் வாக்குகள் பதிவாகின. வாக்குப்பதிவு நிறைவடைந்ததும், வாக்குப் பெட்டிகள் அரசியல் கட்சியின் வாக்குச்சாவடி முகவர்களின் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டன.

ஜிபிஎஸ் கருவி பொருத்தப்பட்ட வாகனங்களில் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவம், போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை மையமான சித்தோட்டில் உள்ள ஈரோடு அரசு பொறியியல் கல்லூரிக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. வாக்கு எண்ணிக்கை மையத்தில், 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு தீவிர கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. முதல் அடுக் கில் ஸ்ட்ராங் ரூம் பகுதியைச் சுற்றியும் மத்திய தொழிற்பாதுகாப்புப் படையினரும், இரண்டாம் அடுக்கில் தமிழ்நாடு பட்டாலி யன் போலீசார், மூன்றாம் அடுக்கில் ஆயுதப் படை போலீசார், நான்காம் அடுக்கில் லோக்கல் போலீசாரும் 24 மணி நேரமும் 3 ஷிப்ட் முறையில் 400க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

வாக்கு எண்ணிக்கை நேற்று (8ஆம் தேதி) காலை 8 மணிக்கு நடைபெற்றது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் 14 மேஜைகளில் எண்ணப்பட்டன.

நேற்று காலை 8.00 மணிக்குத் தொடங்கிய வாக்கு எண்ணிக்கையில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில நான்காவது சுற்று வாக்குகள் எண்ணப்பட்டிருந்தன.

நான்காவது சுற்று முடிவில் கழக வேட்பாளர் 30, 657 வாக்குகள் பெற்றிருந்தார்.

ஐந்தாவது சுற்று முடிவில் தி.மு.க. 36,880, நாம் தமிழர் 7608 வாக்குகள் பெற்றிருந்தனர்.

வாக்கு வித்தியாசம் -29272

நிறைவாக - பல்லாயிரக் கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் கழக வேட்பாளர் வாகை சூடினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.2.2025) கஜகஸ்தான் நாட்டில் உலக வாள்வீச்சு கூட்டமைப்பு (FIE) நடத்தும் ஜூனியர் உலக கோப்பை வாள்வீச்சு போட்டியில் பங்கேற்க உள்ள தமிழ்நாடு வீரர் ப. அரவிந்தன் அவர்களுக்கு செலவின தொகையாக ரூ. 3.15 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

### பிரதமர் சாலையோர கடன் உதவித் திட்டம்!

# தமிழ்நாட்டில் பயனாளிகள் எத்தனை பேர்?

## மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!



புதுடெல்லி, பிப்.9–

பிரதமர் சாலையோர வியாபாரிகள் ஆத்ம நிர்பார் திட்டம் (PM SVANidhi) தொடர்பாக தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்பி. கேள்விகளை எழுத்துப்பூர்வமாக கேட்டிருந்தார்.

அது வருமாறு:

“இத்திட்டம் துவங்கியதில் இருந்து இந்தத் திட்டத்தின் கீழ் அரசு ஒதுக்கிய நிதியின் விவரங்கள் மாநில, யூனியன் பிரதேச வாரியாக என்ன? இத்திட்டத்தின் பயனாளிகள் விவரங்கள் குறிப்பாக தமிழ்நாட்டில், மாவட்ட வாரியாக என்ன? தமிழ்நாட்டில் ஆரம்ப கடன் தொகை ரூ. 10,000 சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்திய பிறகு, ரூ. 20,000 மற்றும் அதற்கு மேற்பட்ட ரூ. 50,000 கடன்களைப் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை குறித்த தரவுகளை அரசாங்கம் தொகுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள், மாவட்ட வாரியாக; மற்றும்

மோசடி மற்றும் தகுதியற்ற பயனாளிகள் இத்திட்டத்தை அணுகுவதைத் தடுக்க அரசு எடுத்த, எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?” என கனிமொழி எம்பி எழுத்துபூர்வமாக கேள்விகளை கேட்டிருந்தார்.

இந்த கேள்விகளுக்கு ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் இணையமைச்சர் தோகன் சாகு அளித்த எழுத்துபூர்வமான பதிலில்.

“பிரதமர் சுவநிதி என்பது ஒன்றிய அரசின் திட்டமாகும், இத்திட்டத்தின் கீழ் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு எந்த நிதியும் வெளியிடப்படுவதில்லை. கடன் தொகை வங்கிகளால் நேரடியாக பயனாளிகளின் கணக்குகளில் செலுத்தப்படுகிறது.

ஜனவரி 30, 2025 நிலவரப்படி, பிரதமர சுவநிதி திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 68.02 லட்சம்ஆகும். இவர்களில் தமிழ்நாட்டில் 3.99 லட்சம் பயனாளிகள் உள்ளனர். தமிழ்நாட்டில் அதிகபட்சமாக சென்னை மாவட்டத்தில் ஒரு லட்சத்து 429 பயனாளிகள் கடன் பெற்றுள்ளனர். தூத்துக்குடி மாவட்டத்தில் 8966 பேர் பயன் பெற்றுள்ளன.

ஜனவரி 30, 2025 நிலவரப்படி, தமிழ்நாட்டில், சுமார் 2.28 லட்சம் பயனாளிகள் முதல் தவணை கடனை திருப்பிச் செலுத்தியுள்ளனர், அவர்களில் 1.37 லட்சம் பயனாளிகள் 2வது தவணை கடனைப் பெற்றுள்ளனர். மேலும், 45,363 பயனாளிகள் 2வது தவணை கடனை திருப்பிச் செலுத்தியுள்ளனர், இவர்களில் 26,955 பயனாளிகள் 3வது தவணை கடனைப் பெற்றுள்ளனர்.

மோசடியான மற்றும் தகுதியற்ற பயனாளிகள் PM SVANidhi திட்ட சலுகைகளை அணுகுவதைத் தடுக்கவும், அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பங் களைச் செயலாக்குவதை எளிதாக்கவும், ஒரு முழுமையான ஐ டி போர்டல் -www.pmsvanidhi.mohua.gov.in உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த போர்டல் மூலமே அனைத்து சாலையோர வியாபாரிகளும் திட்ட சலுகைகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும். செயல்பாடுகளை எளிதாக்க, மொபைல் விண்ணப்பங்களை அனுப்பும் வசதியும் உள்ளது. மேலும் சாலையோர வியாபாரிகள் தங்கள் விண்ணப்பத்தை ஆன்லைனில் பூர்த்தி செய்வதற்காக, சரிபார்ப்புக்குப் பிறகு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்படும் விற்பனைச் சான்றிதழ் (CoV) அல்லது பரிந்துரை கடிதம் (LoR) ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். மேலும், கடன் வழங்கும் நிறுவனங்கள் கடன்களை அனுமதிப்பதற்கு முன்பு பெறப்பட்ட விண்ணப் பங்களையும் ஆய்வு செய்கின்றன” என்று ஒன்றிய இணை அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

### திருச்சிக்கு வருகை தரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு

# முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் உற்சாக வரவேற்பு!

## மத்திய – வடக்கு மாவட்டச் செயலாளர் க.வைரமணி – ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!





திருச்சி, பிப். 9 -

திருச்சி மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

தி.மு.கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சி கம்பரசம்பேட்டையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பறவைகள் பூங்காவினை திறந்து வைப்பதற்காக இன்று (09.02.2025- தேதி ஞாயிற்றுக்கிழமை) மதியம் சுமார் 1.00 மணியளவில் விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தரவிருக்கின்றார்.

திருச்சிக்கு வருகை தரும் துணை முதல்வர் அவர்களுக்கு திருச்சி விமான நிலையத்தில் கழக முதன்மைச் செயலாளர் - கே. என்.நேரு தலைமையிலும் எங்கள் ( மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி, ந.தியாகராஜன்) முன்னிலையிலும் மத்திய மற்றும் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

அதனை தொடர்ந்து மாலை 3.00 மணியளவில் பறவைகள் பூங்கா திறப்பு விழா நடைபெறவிருக்கின்றது. இந்நிகழ்ச்சிகளிலும் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அணிகளின் பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து துணை முதல்வர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்திட வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தாராசுரத்தில் உள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், எஸ்.கே.முத்துச்செல்வம், ஜே.சுதாகர், பேரூர்க் கழகச் செயலாளர்கள் எஸ்.எம்.எஸ்.பாலசுப்பிரமணியன், ஜெப்ருதீன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டப் பொறியாளர் அணியின் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் பா.மு முபாரக் தலைமையில் குன்னூர் நகர கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ஆர். பி. பரமேஷ் குமார் முன்னிலை வகித்தனர். மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில் குமார் அனைவரையும் வரவேற்றார். இக்கூட்டத்தில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் தேர்தல் களப் பணிகள் ஆற்றுவது குறித்தும், அடுத்த மாதம் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளை நியமிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இறுதியாக மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் தங்கேஷ் நன்றியுரை கூறினார்.